பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 26 புதன்கிழமை 08.04.2020 கதிர் 154

இனி அது ரகசியம் அல்ல!

தென்னிலங்கையின் பெரும்பான்மை இன ஊடக நண்பர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசியில் கூறிய தகவல் இது:-

“கோட்டாபயவின் ஆட்சியும், ஆட்சிப் பீட நடவடிக்கைகளும் தெற்கில் மக்கள் மத்தியில் ஒரு புதுவிதமான பக்கம் 02 »

# வாழ்வா, சாவா என்பதை தீர்மானிக்கும் வேளை இது

## நாட்டுக்கான விசேட உரையில் பிரதமர் மஹிந்த



கொழும்பு, ஏப். 08

நாம் வாழ்வதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது இந்த வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முறையிலேயே உள்ளது. எங்களது அவதானம், எங்களது அர்ப்பணிப்பு, ஒழுக்கம் என்பவற்றின் அடிப்படையில் தான் இவ்வாறான பாரிய நோய் தொற்றில் இருந்து நாங்கள் வாழ்வதா, சாவதா என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டு மக்களுக்குத் தாம் நேற்றிரவு ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் உங்கள் மத்தியில் உரையாற்றுவது கொரோனா தொற்றுக்கு எதிராக எமது அரசும் மக்களும் பாரிய யுத்தம் போன்ற பாரிய அச்சுறுத்தல் ஒன்றை எதிர்நோக்கியிருக்கும் பக்கம் 04 »

## 185 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.08

இதுவரை நாட்டில் 185 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று 7 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இதுவரை 42 கொரோனா நோயாளர்கள் குணமடைந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளான 137 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## எவ்வித பேதமும் இன்றி சமுர்த்திக் கொடுப்பனவு

கொழும்பு, ஏப்.08

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு எவ்வித பேதமும் இன்றி கொடுப்பனவு வழங்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பக்கம் 02 »

# இரு வாரத்தில் கொரோனா 2 மடங்காகும்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 08

கொரோனா வைரஸ் பரவல் எதிர்வரும் இரு வார காலத்துக்குள் இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் மேலும் கடுமையாக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

பக்கம் 02 »

## வெசாக் நிகழ்வுகள் இரத்தாகும் நிலை

கொழும்பு, ஏப். 08

தேசிய வெசாக் நிகழ்வுகளை இரத்துச் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திரவை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பக்கம் 02 »

## 16,892 பேர் கைது

கொழும்பு, ஏப். 08

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறி நடந்துகொண்ட குற்றச்சாட்டில் 16 ஆயிரத்து 892 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 4 ஆயிரத்து 313 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 20ஆம் திகதி பக்கம் 02 »

## பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தீவிர சிகிச்சைக்குப் பிரிவுக்கு மாற்றம்



கொரோனா வைரஸ் பிடியில் சிக்கியுள்ள பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் உடல்நிலை சற்று மோசமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைக் குப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என டவுனிங் ஸ்ட்ரீட் தெரிவித்துள்ளது.

பிரதமரின் செய்தித் பக்கம் 02 »

## ஏகாதிபத்தியவாதத்தை நிலைநாட்ட முயற்சிகள்

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 08

தற்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி நாட்டில் ஜனநாயகத்தை பக்கம் 02 »

## கடுமையான நோய்ப் பாதிப்புக்குள்ளானோர் வைத்தியசாலைக்கு கட்டாயம் வரவேண்டும்

### யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.08

கடுமையான நோய்ப் பாதிப்புக்குள்ளாகியவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கட்டாயம் வர வேண்டும். கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் தனியான பிரிவில் சேர்க்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். எனவே நோயாளர்களைப் பராமரிப்பதற்கு ஏனைய விடுதிகள் தயார் நிலையில் உள்ளன.

– இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

எனவே பொது மக்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வந்தால் கொரோனா பக்கம் 02 »

## சுகாதாரத்துறைக்கு மஹிந்தர் பாராட்டு

கொழும்பு, ஏப். 08

உலகவாழ் மக்கள் பாரிய சுகாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், நாட்டையும், மக்களையும் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அனைத்து சுகாதார சேவையாளர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கொரோனா வைரஸ் தாக்கம் முழு உலகத்துக்கும் பாரிய பக்கம் 02 »

## வாழ்வா,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*சிந்தனையை ஏற்படுத்தியிருக்கின்றன.*

*அதுவும் கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதற்கென அவர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தெற்கில் பெரும் 'அப்ளாஸ்' கிட்டுகின்றது.*

*ஏதோ கோட்டாபயவின் ஆட்சி இப்போது வந்தமையால் தப்பினோம், பிழைத்தோம், இல்லையேல் முழு இலங்கையையுமே கொரோனா கபளீகரம் செய்திருக்கும் என்பதுதான் அவர்களின் கருத்து நிலைப்பாடு.*

*கொரோனாப் பிரச்சினையை கையாள்வதற்காக, கலைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டும் என்று எதிரணியினரும் தமிழ்க் கூட்டமைப்பினரும் கோருகின்றனர்.*

*நீங்கள் கோருவது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை, சில தேவைகளுக்காக மட்டும் மீண்டும் கூட்ட வேண்டும் என்பதை.*

*ஆனால் தென்னிலங்கை சாதாரண பொதுமகனின் கேள்வி இனி நாடாளுமன்றமே தேவைதானா என்பதுதான்.*

*இந்த நெருக்கடிக் களத்தையே நாடாளுமன்றமன்றி, கடும் ஒழுங்குமுறையைப் பின்பற்றும் தனது இராணுவக் கட்டமைப்பு ஆள்களைப் பயன்படுத்தி கனகச்சிதமாக தாண்டும் வேலையை ஜனாதிபதி கோட்டாபய செய்திருக்கின்றார்.*

*இந்தச் சூழலில் இனியும் நாடாளுமன்றம் ஒன்று அவசியம்தானா என்ற கணிப்பில்தான் தென்னிலங்கை மக்களின் சிந்தனை"* – என்றார் அவர்.

தெற்கின் சிந்தனை இப்படித் திரும்புவதை உணர்ந்தமையால்தான் *"தற்போதைய பேரிடர் நெருக்கடியைப் பயன்படுத்தி, நாட்டில் ஜனநாயகத்தை மழுங்கடித்து, ஏகாதிபத்தியவாதத்தை நிலை நாட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதைக் காணமுடிகின்றது"* – என்று சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை எழுப்பியிருக்கின்றார்.

நாட்டுக்கு நாடாளுமன்றமும் எம்.பிக்களும் தேவைதானா, அவசியமில்லை – என்ற சிந்தனை தெற்கில் எழுந்து வருவது மிகமி ஆபத்தான விடயம்.

★ ★ ★

கொரோனாப் பேரிடர் என்ற சவாலை எதிர்கொள்ளும் விடயத்தில் நமது மருத்துவத் துறையினரும் சுகாதாரப் பிரிவினரும் ஆற்றும் தியாக வேள்வி, அர்ப்பணிப்பு மிக்க பணி போற்றுதற்குரியது. யாவரும் விதந்துரைக்க வேண்டியது. அதில் எள்ளவும் சந்தேகமில்லை.

பிரதமர் மஹிந்தவும் தமது உரைகள், அறிக்கையில் அது குறித்து நெஞ்சைத் தொடும் விதத்தில் கருத்துக் கூறுகின்றார். அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அது வெறும் கை முழம் போடும் வேலையாகத்தான் எமக்குத் தோற்றுகின்றது.

இந்த ஊழியர்களின் மகத்தான சேவையைப் போற்றும் விதத்தில் நாம் – நமது சமூகம் – அவர்களுக்குச் செய்யும் கைமாறு யாது? தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றும் அந்த பெருஞ் சேவையாளர்களுக்கு – அவர்கள் எடுக்கும் 'ரிஸ்க்குக்கு' குறைந்த பட்சம் பெருந்தொகை பணம் தரக்கூடிய உயிர்க் காப்புறுதித் திட்டத்தையாவது இந்த அரசு அறிவித்திருக்கலாம் என்பது எனது பணிவான கருத்து!

பணிக் காலத்தில் – தொற்று ஏற்பட்டு அவர்கள் பாதிப்புற்றால் இத்தனை லட்சம் என்று ஒரு காப்புறுதித் திட்டத்தை அரசு அறிவிக்க வேண்டும் என்பது எனது பரிந்துரை.

வாய்ப்புக் கிடைத்தால் இந்த யோசனையை நாட்டின் பிரதமரின் காதில் போட்டு வைக்க முயற்சிக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் கருத்து என்ன வாசகர்களே...!

★ ★ ★

ஊரடங்கு மத்தியில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்புக் குறித்து இன்று பிரஸ்தாபிப்பேன் என்று நேற்றுக் குறிப்பிட்டேன். இடவசதி இன்மையால் அது நாளை இடம்பெறும். மன்னியுங்கள்.

–மின்னல்–

## கடுமையான,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்று ஏற்படும் என்று அச்சமடையத் தேவையில்லை. சாதாரண நோய்களுக்குப் பிரதேச வைத்தியசாலைகளில் மருத்துவ சிகிச்சைப் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் பெரியளவிலான நோய்களுக்குக் கட்டாயம் போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 15 நாள்களாகத் தொடர்ச்சியாக நீடித்துவரும் ஊரடங்குச் சட்டம் காரணமாக வைத்தியசாலையில் மாதாந்த சிகிச்சை பெறும் நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தீவகப் பகுதி, தென்மராட்சி, வடமராட்சி மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் சிகிச்சை பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

இருதய சிகிச்சை, நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், கண் நோய், போன்ற நோய்களுக்கு உரிய சிகிச்சைகளை பெறுவதிலேயே நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுதொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிக்கையில்–

கொரோனா தொற்று பரவல் நிலை ஏற்பட்ட பின்னர் மாதாந்த சிகிச்சைகள் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நிறுத்தப்பட்டன. அவர்களுக்கான மருந்துகள் தொலைபேசி மூலமாக வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.

இருப்பினும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சில பேருக்கு மருந்துகள் கிடைப்பதில்லை எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தந்த மருத்துவர்கள் அந்தந்த நோயாளிகளுக்கும் இருந்திருக்கும் முறையின் கீழ், விரைவாகத் தொடர்பினை ஏற்படுத்தி அவர்களுக்கு மருந்து வழங்குமாறு நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம் – என்றார்.

## ஏகாதிபத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழுங்கடித்து, ஏகாதிபத்தியவாதத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

இத்தருணத்தில் அரசியல்சார் நலன்களை அடைய முயற்சிப்பது வரவேற்கத்தக்கதல்ல. மாறாக மக்களின் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டுமக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் நேற்று செவ்வாய்க்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக தற்போது நாட்டின் அனைத்துத் துறைகளும் வீழ்ச்சி கண்டிருப்பதுடன், மக்களின் அன்றாட வாழ்க்கையும் ஸ்தம்பிதமடைந்திருக்கிறது. விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைத் தொடரமுடியாத நிலைக்குத்தந தள்ளப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலத்தில் பாரியதொரு உணவுப்பொருள் தட்டுப்பாடொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. மருந்துப்பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கான ஜீவனோபாய மார்க்கங்கள் அனைத்தும் முடங்கிப்போயிருக்கின்றன.

எனவே இத்தகையதொரு நெருக்கடியில் அரசு நாட்டுமக்கள் தொடர்பில் சிந்தித்து, அவர்கள் வாழ்வதற்கான வழிவகையொன்றை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். ஒரு மனிதன் வாழ்வதற்கான அன்றாட வாழ்க்கைச்செலவு பெருமளவில் அதிகரித்திருக்கையில், சிறியதொரு தொகைப் பணத்தை வழங்கி அவர்களது தேவைகளை ஈடுசெய்ய முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனினும் தற்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி நாட்டில் ஜனநாயகத்தை மழுங்கடித்து, ஏகாதிபத்திய வாதத்தை நிலைநாட்டுவதற்கா முயற்சிகள் இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது. இத்தருணத்தில் அரசியல்சார் நலன்களை அடைய முயற்சிப்பது வரவேற்கத்தக்கதல்ல மாறாக மக்களின் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் – என்றார்.

## வெசாக்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெசாக் தினத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பூசைகளை வீடுகளிலேயே மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில், மே மாதத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை நடத்த முடியாது என புத்தசாசன அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான வெசாக் தினம் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவால் விடுத்துள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தங்களின் பாதுகாப்பை பொருட்படுத்தாமல் 24 மணித்தியாலமும் சேவையாற்றும் சுகாதார சேவையாளர்களுக்கு இலங்கை வாழ் மக்கள் அனைவரும் கடன்பட்டுள்ளோம்.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு எதிராகப் போராடும் உலகவாழ் சுகாதார சேவையாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்களின் சேவையினை முன்னெடுக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவ துடன், மன தைரியமும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும் – என்றார்.

## எவ்வித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில் –

அனைத்து சமூர்த்திப் பயனாளிகளுக்கும் நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

எந்த வேறுபாடும் இன்றி இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட்டதை எனது அரசியல் வாழ்வில் நான் பார்க்கவில்லை. நூற்றுக்கு 80 வீதம் கட்டாய சேமிப்பு உள்ளவர்களுக்கு மாத்திரம் சமூர்த்தி நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசு சமூர்த்தி நிவாரணங்களை வழங்கிய போது அதனைப் பெற்றுக் கொண்ட யாருக்கும் 80 வீத கட்டாய சேமிப்பு காணப்படவில்லை.

தற்போது அந்த முறைமை நீக்கப்பட்டுள்ளது. 80 வீத கட்டாய சேமிப்பு உள்ளவர்களுக்கு மாத்திரம் சமூர்த்தி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற முறையை தற்போதும் நடைமுறையில் இருந்திருந்தால் கடந்த அரசால் நிவாரணம் பெற்ற எவருக்கும் தற்போது கிடைக்கப் பெறாது.

எனினும் அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்காது எவ்வித பேதமும் இன்றி இம்முறை எமது அரசால் சமூர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஆனால் இந்தத் தீர்மானம் சமூகமயப்படுத்தப்படவில்லை. அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் பரவலடைந்துள்ளன. இதுவே உண்மை நிலைமையாகும் – என்றார்.

## 16, 892 பேர்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான

காலப்பகுதியினுள்ளேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நேற்று நண்பகல் 12 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான 06 மணித்தியால காலப்பகுதியில் மட்டும் ஊரடங்குச் சட்டத்தை மீறி நடந்துகொண்ட குற்றச்சாட்டில் 768 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 249 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## விசேட செயலணியின் தீர்மானங்கள்

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட செயலணியின் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

அதில் சுகாதார துறை சம்பந்தமான பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நாட்டில் உள்ள சகல மருந்தகங்களும் திறக்கப்பட வேண்டும்.

2. சகல ஆயர்வேத மருந்தகங்களும் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலத்திலும் திறக்கப்பட வேண்டும்.

3. சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரு மருந்தகம் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போது நடமாடும் சேவையை முன்னெடுக்கவும் அனுமதியளித்தல்.

4. கொத்தமல்லி, இஞ்சி மற்றும் வெனிவெல்கட்டையை இறக்குமதிசெய்தல்.

5. ஆயுர்வேத சிகிச்சையை பெறும் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை அஞ்சல் மூலம் பெற வழியேற்படுத்தி கொடுத்தல் என்பனவாகும்.

## இரு வாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் குறித்து, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் மருத்துவ பீடங்களின் தலைவர்களின் பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்துரையாடலில் பங்கேற்ற பேராசிரியர் இந்திக கருணாதிலகவினால் பொது மக்களுக்கு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதை விடவும் எதிர்காலத்தில் அதிகளவான நிர்வாகம் அத்தியாவசியமாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், இம் மாதம் 20 ஆம் திகதி வரை இரு வார காலத்துக்கு வைரஸ் தொற்று பரவலானது இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே 14 நாள்களுக்கு விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் மேலும் கடுமையாக்கப்படவேண்டும் என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, இந்த இரு வார காலத்துக்கும் மேலதிகமாக தேவையேற்படின் இதே போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ எழுத்து மூலம் அறிவித்துள்ளார் எனவும், அதற்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கூறினார்.

அத்தோடு, பொதுப் போக்குவரத்தின் போது சமூக இடைவெளியுடன் பயணிப்பதற்குரிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து, அவற்றை முழு நாட்டிலும் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலணிக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ராஜசிங்க இதன்போது தெரிவித்தார்.

விசேட வைத்தியர் மகேஷ் ஹரிஸ்சந்திர கருத்துத் தெரிவிக்கையில், ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்படும் சந்தர்ப்பங்களில் அசௌகரியமின்றி பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் பாதிக்கப்பட்டோரை இனங்காண்பதற்கும் முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, புலனாய்வுத் துறையினர் ஊடாக தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தொற்று நோயியல் பிரிவினால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இதுவரை கொரோனா வைரஸ் சிகிச்சைகளுக்காக அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும், முல்லேரியா வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பிரிவை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் தனது மருத்துவக் குழுவின் ஆலோசனை யின் பேரில் அவசரசி கிச்சைப் பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார் எனவும், 'சிறந்த கவனிப்பை' அவர் பெற்று வருகிறார் எனவும் கூறினார்.

# விடுமுறையை முடித்துத் திரும்புகின்ற படையினரும் தனிமைப்படுத்தலுக்கு!

## கேப்பாப்புலவு, பிலவுக்குடியிருப்புப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளை ஒட்டி முகாம்களாம்





முல்லைத்தீவில் விடுமுறை முடித்துக் கடமைக்குத் திரும்பும் படையினருக்கான தனிமைப்படுத்தல் முகாம்களை பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அண்மையாக இராணுவத்தினர் அமைத்திருப்பதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுமுறையில் சென்று வருகின்ற இராணுவத்தினரை 14 நாள்கள் தனிமைப்படுத்துகின்ற நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

விடுமுறைக்கு சென்று வருகின்ற இராணுவத்தினரைத் தனிமைப் படுத்துவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்புலவு மாதிரி கிராமத்தில் அமைந்திருக்கின்ற பாடசாலை வளாகத்தில் ஒரு முகாமும், பிலவுக்குடியிருப்பு பகுதியில் விடுவிக்கப்பட்ட மக்களுடைய காணிகளில் இருக்கின்ற பொது கட்டடத்தில் இன்னொரு முகாமும் அமைக்கப்பட்டுள்ளன.

மாதிரி கிராமத்தில், மிக நெருக்கமாக மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் அந்த இடத்தில் இவ்வாறாக நோய்த்தொற்று ஏற்பட்டு இருக்கலாம் அல்லது ஏற்பட வாய்ப்புள்ளது என்ற அடிப்படையில் விடுமுறையில் சென்று வருகின்ற இராணுவத்தினரை தனிமைப்படுத்த முகாமை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இந்தப் பாடசாலையில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

## ஓட்டமாவடியில் ஊரடங்கு வேளையில் நான்கு வர்த்தக நிலையங்கள் சூறை!



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள நான்கு வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ள சம்பவம் நேற்று அதிகாலை ஊரடங்கு வேளையில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

ஓட்டமாவடி தபால் நிலைய வீதியிலுள்ள சில்லறை வியாபார நிலையம், ஒயில் வியாபார நிலையம் என்பவற்றினை உடைத்து சில்லறை பொருள்கள் மற்றும் ஒயில் வகைகள், பணம் என்பவற்றுடன் வியாபார நிலையத்தில் பொறுத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவினை உடைத்து அதன் உதிரிப்பாகங்களையும் திருடிச் சென்றுள்ளனர் என வர்த்தக நிலையத்தின் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஊரடங்குச் சட்டம் இரண்டு மணியளவில் அமுல்படுத்தப்பட்ட போது வியாபாரத்தை முடித்து விட்டு உரிமையாளர்கள் வீடு சென்றதாகவும், நேற்றுக் காலை மக் களுக்கு அத்தியாவசிய பொருள்களை நடமாடும் வகையில் வியாபாரம் செய்வதற்கு வியாபார நிலையத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட போது வியாபார நிலையம் உடைக்கட்டிருந்ததைக் கண்டனர் எனவும் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இவ்வியடம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார்.

## செம்மலை நீராவியடி விகாரையில் ஊழியர் மர்மமான முறையில் சாவு



முல்லைத்தீவு மாவட்டத்தின் பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட நாயாறு குருகந்த ரஜமகா விகாரையில் நேற்று ஒரு மர்ம மரணம் நேர்ந்துள்ளது.

அந்த விகாரையின் விகாராதிபதி அண்மையில் இறந்தபோது அவருடைய உடல் தகனம் செய்ய முற்பட்ட வேளையிலும் பல்வேறு முரண்பாட்டு சம்பவங்கள் இடம் பெற்றமை தெரிந்ததே.

அந்த பௌத்த மத துறவியோடு சேர்ந்து பௌத்த ஆலயத்தில் கடமையாற்றிய ஒருவர் நேற்றைய தினம் ஆலய வளாகத்தில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

அந்த நபர் நேற்று முன்தினம் இரவு நித்திரைக்குச் சென்ற நிலையில் நேற்று காலை எழுந்து வராதமையை அடுத்து அங்கு இருந்தவர்கள் சென்று பார்த்த போது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அந்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், தடயவியல் அதிகாரிகள் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டவர்கள் அவரின் சடலத்தைப் பார்வையிட்டனர். உயிரிழந்தவருடைய உறவினர்கள் இந்த மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனத் தெரிவித்ததன் அடிப்படையில் சடலம் மருத்துவ பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மருத்துவ பரிசோதனை இன்று இடம் பெற உள்ளது .

உயிரிழந்தவர் 2016 ஆம் ஆண்டு முதல், விகாராதிபதியுடன் விகாரையில் கடமையாற்றி வந்த ஜனகபுர பகுதியை சேர்ந்த கமகே நிமால் கருணாரத்ன என்கின்ற 47 வயதுடைய நபர் ஆவார்.

இவருடைய தங்கையார் அவருடைய மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து இருக்கின்றார். மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கின் முதலாவது நோயாளி உடல் நிலை தேறி வருகின்றார்

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதல் நோயாளியான தாவடியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் உடல்நிலை தேறி வருகின்றார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

'அவரது உடல்நிலை தொடர்பில் நேற்று இரவு தொலைபேசியின் ஊடாக கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலை பணிப்பாளருடன் உரையாடியிருந்தேன்.

தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர், நேற்று உடல்நிலை தேறி சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். அவர் இன்னும் சில நாள்கள் அல்லது வாரத்தின் பின்னர் வீடு திரும்புவார் என்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் 22 ஆம் திகதி தாவடியைச் சேர்ந்த குடும்பத்தலைவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்.) அனுப்பப்பட்டார்.

இந்த நிலையில் 15 நாள்கள் தீவிர சிகிச்சையின் பின்னர் அவரது உடல்நிலை முன்னேற்றம் கண்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மிகப் பிரகாசமான பெரியளவு சந்திரன் நேற்றுப் பௌர்ணமியில் தோற்றியது

பௌர்ணமி தினமான நேற்று மிகப் பிரகாச மான பெரிய சந்திரனை காணும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு கிடைத்துள்ளது.

இவ்வருடத்தின் மிகப் பிரகாசமான சந்திரனாக இது தென்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

'சுப்பர் பிங்க் மூன்' என இது அழைக்கப்பட்டது.

சந்திரன் தனது சுற்று வட்டப்பாதையில் பூமிக்கு மிக அருகாக வரும்போது இந்த 'சுப்பர் பிங்க் மூன்' தோன்றும் என வானியலாளர்கள் கூறுகின்றனர்.



இதன்போது சந்திரன் இளஞ்சிவப்பு நிறமாக தென்படமாட்டாது. ஆனால், வழக்கத்தை விட பெரிதாகவும் பிரகாசமாகவும் தோன்றும். ஏப்ரல்மாதத்தில் வரும் சுப்பர் பிங்க் மூன் ஆனது 'எக் மூன்', 'பிஷ் மூன்' எனவும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பண்டாரவளையில் சிறுமி ஒருவரின் கையில் வெடித்த மர்மப் பொருள்!

பண்டாரவளை கினிகம பகுதியில் சிறுமி ஒருவரின் கையிலிருந்த மர்மப் பொருள் ஒன்று வெடித்துள்ளது.

இதன் காரணமாக காயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கினிகம பகுதி வீடொன்றில் நேற்று செவ்வாய்கிழமை இந்த சம்பவம் நடந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது 11 வயதுடைய சிறுமியொருவரே காயமடைந்துள்ளார். இவர் விளையாடுவதற்காக கையில் வைத்திருந்த பொருளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுமி தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பண்டாரவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com



## தனித்து இராணுவப் போக்கு மூலம் கொரோனாவை அடக்கு முடியுமா?

**கொரோனா பேரிடர் அவலத்திலிருந்து மீளும் விடயத்தை தாம் அவசர கால நிலைமையாகக் கருதவில்லை என்று திருவாய் மலர்ந்திருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ.**

**அவர் நினைப்பது போல நிலைமை ஒன்றும் சாதாரண மானதாக இல்லை என்பதுதான் யதார்த்தக் களநிலைத் தகவலாகும்.**

**வெறுமனே ஊரடங்கு, மக்கள் அசைவியக்கத்தை தடுத்தல், சமூக இடைவெளியைப் பேணுதல், கூட்டம் கூடாமல் பார்த்துக் கொள்ளுதல் என்ற இராணுவ உத்தரவுப் பாணி நடவடிக்கை மூலம் கண்ணுக்குத் தெரியாத உயிர் கொல்லி நுண்ணுயிரியான கொரோனாவை வெற்றி கொண்டு விடலாம் என்று எண்ணுகின்றது இராணுவத்தனமான அவரது எண்ணப்போக்கு.**

**அதே இராணுவச் சிந்தனை என்ற குட்டையில்ஊறிய மட்டையாகத்தான் அவரைச் சூழ்ந்தவர்களாகவும், அவரது நெருங்கிய சகாக்கள் மற்றும் ஆலோசகர்களாகவும் உள்ளவர்கள் இருக்கின்றனர்.**

**ஆகவே அவர்களின் சிந்தனைப் போக்கும் கூட இத்தகைய இராணுவக் கெடுபிடித் தீவிரம் மூலம் கண்ணுக்குத் தெரியாத வைரஸைத் தோற்கடித்து, அதன் மூலம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தமது ஆளுமையை – ஆட்சித் திறனை – உறுதிப்படுத்தி நிலைநாட்டிவிடலாம் என்றுதான் அமைந்திருக்கின்றது என்பது கண்கூடு.**

**ஆனால், கொரோனா வைரஸ் என்ன சாதாரண மனிதனா இராணுவக் கெடுபிடிக்குக் கட்டுப்பட...?**

**அது தன்பாட்டில் தன் கைவரிசையை மெல்லக் காட்டத் தொடங்கிவிட்டது.**

**இனித்தான் விடயம் இருக்கின்றது. விவகாரம் வெளிப்படவுள்ளது.**

**தம்மைக் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் என்றே தெரியாத – கருதாத – பத்தாயிரம் பேருக்கு மேற்பட்டோர் இப்போது சமூகத்துக்குள் விடப்பட்டிருக்கின்றனர் என சுகாதார, மருத்துவ அதிகாரிகள் அதிரடிச் செய்தியை – தகவலை – வெளியிட்டிருக்கின்றார்கள்.**

**அப்படி அதிக எண்ணிக்கையில் நாட்டுக்குள் – மக்கள் மத்தியில் – தொற்றாளர்கள் சர்வசாதாரணமாக இருக்கும் போது –**

**இந்த இராணுவக் கெடுபிடிப் போக்கு மற்றும் ஊரடங்கு, சமூக இடைவெளி பேணல் போன்றவை மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி, அடக்கி, பரவலைத் தடுத்து விடலாம் என்று எண்ணுவது வெறும் பகல் கனவேயன்றி வேறில்லை.**

**கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே வழி அத்தொற்றுத் தொடர்பான பரிசோதனைகளின் எண்ணிக்கையை அளவு கணக்கின்றி அதிகரிப்பதாகும் என்பதை நேற்று இப்பத்தியில் விவரித்திருந்தோம்.**

**இப்போது இலங்கையில் தினசரி 250 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று இருக்கின்றதா என்று பரிசோதனை நடத்தப்படுகின்றது.**

**இந்த நோய்த் தொற்றுப் பரம்பலை அடக்கும் முயற்சியில் இந்த எண்ணிக்கை என்பது யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றது. நரிவாலைக் கொண்டு கடலாழம் அளப்பதற்கு ஒப்பானது.**

**நேற்றும் இப்பத்தியில் இதனை வலியுறுத்தியிருந்தோம்.**

**குறைந்த பட்சம் தினசரி ஐயாயிரம் முதல் பத்தாயிரம் பேருக்கு என்று இரத்தப் பரிசோதனை செய்து, இச்சோதனையைத் தீவிரப்படுத்த வேண்டும்.**

**அப்படிச் செய்வதாயின் தினசரி 16 கோடி ரூபா – ஒரு மாதத்துக்கு சுமார் ஐந்நூறு கோடி ரூபா – நிதி அரசுக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.**

**அப்படிச் செய்வதை விடுத்து வெறுமனே இராணுவப் பாணிக் கெடுபிடி மூலம் கொரோனாவை அடக்கி விடலாம் என்று எண்ணுவது பேதைத்தனமானது; பயனற்றது.**

**கொரோனாத் தொற்றைக் கண்டுபிடிக்கும் சோதனையை கண்மூடித்தனமாக அதிகரித்த நாடுகள் இன்று கொரோனாவுக்கே சவால் விட்டுக் காத்திருக்கும் நிலைக்கு உயர்ந்திருக்கின்றன.**

**இப்படி எல்லாம் துணிச்சலாகவும், தந்திரோபாயமாகவும், சாத்தியமான முறையிலும் முடிவு எடுக்கும் ஆட்சித் தலைமையே இன்று தேவைப்படுகின்றது.**

**இராணுவக் கெடுபிடிப் போக்குத் தலைமையல்ல.**

## வாழ்வா,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்திலேயே. உலகம் முழுவதும் 200க்கும் அதிகமான நாடுகள் இந்த நோய்த் தொற்றுக்கு எதிராகப் போராடும் முறையையும், அந்த நாடுகளில் ஆயிரக்கணக்கானவர்களின் சடலங்கள் மயானங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் முறையையும் நீங்கள் செய்திகளின் ஊடாக காண்பீர்கள்.

இந்த நோய்த் தொற்று உலகிற்கு தெரிய வந்த சந்தர்ப்பத்தில் இருந்து ஜனாதிபதியுடன் அரசும் மக்களின் வாழ்வு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி செயற்பட்டுள்ளது. இந்த நிலையைப் புரிந்து கொண்டதால் தான் சீனாவில் வூஹான் நகரில் சிக்கியிருந்த இலங்கையர்களை, உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னர் விமானம் ஒன்றை அனுப்பி எமது நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்தோம்.

அவர்களை அழைத்துவரும் போது நாம் எமது நாட்டில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களை அமைத்து விட்டோம். அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து இலங்கைக்கு வரும் நூற்றுக்கணக்கானவர்களை தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்கள் பலவற்றிற்கு மிகவும் குறுகிய காலத்தில் அனுப்புவதற்கு ஏற்ற வகையில் மத்திய நிலையங்களை ஏற்படுத்தினோம். தற்போது ஒரே சந்தர்ப்பத்தில் ஆயிரக்கணக்கானோரை தனிமைப்படுத்தக் கூடிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்கள் சுமார் 40 வரை எம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்கள் வெறுமனே தங்கும் இடங்கள் மாத்திரம் அல்ல. சிறந்த மட்டத்தில் உள்ள கட்டடங்கள், கட்டில்கள், வைத்தியர்கள், உதவியாளர்கள், மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள், மலசலகூட வசதி, சுகாதார முறையிலான உணவு, சுத்தமான குடிதண்ணீர் மாத்திரம் இன்றி கொத்தமல்லி அவித்து ஆயிரக்கணக்கானோருக்கு 14 நாட்களும் எவ்வித குறைவும் இன்றி பெற்று கொடுக்கப்படுகின்றது. முகம் சுளித்துக் கொண்டு தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்குச் செல்லும் நபர்கள் இன்று புன்னகையுடன் வெளியே வருவது அங்கு எந்தக் குறையும் இல்லாமல் அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்படுகின்றமையால்தான். அதே போன்று கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் விசேட வைத்தியசாலையை நாங்கள் 6 நாள்களில் வெலிகந்தையில் நிர்மாணித்தோம்.

அது மாத்திரமல்ல, இலங்கைக்கு வருபவர்களை பரிசோதனை செய்து நோய் தொடர்பான சந்தேகங்கள் இருந்தால் அவர்களுடன் தொடர்புகளை பேணிய ஆயிரக்கணக்கான நபர்களை அடையாளம் கண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று வீடுகளிலேயே வைத்து தனிமைப்படுத்தலை மேற்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். தனிமைப்படுத்தலை புறக்கணிக்கும் ஆயிரக்கணக்கானவர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் இருந்து சமூகத்தை காப்பாற்றுவதற்காக அரச புலனாய்வுப் பிரிவினரை ஈடுபடுத்த ஜனாதிபதிக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

நாங்கள், முதல் கொரோனா நோயாளியை அடையாளம் கண்டவுடனேயே சகல பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை வழங்கி நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்தோம். இது தொடர்பில் ஜனாதிபதி விசேட படையணியொன்றை ஆசிய வலய நாடுகளில் முதலில் ஸ்தாபித்தவர்கள் நாங்களே. தனிமைப்படுத்தல் செயற்பாடுகளில் எங்களுக்கு கொள்கையாக காணப்பட்டது மக்களை சிரமத்துக்குள்ளாக்காமல் மக்களின் தேவைகளை பூரணப்படுத்துவதே. அதனால் நாங்கள் யுத்த காலத்தில் கூட முழுமையாக ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதார துறை விசேட நிபுணர்களின் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தினோம்.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டமையினால் எங்களது ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள், அதே போன்று அரச காரியாலயங்களை மூடுவதற்கான நிலை ஏற்பட்டமை உங்களுக்குத் தெரியும். அப்படி ஏற்பட்டாலும் மக்களின் வாழ்வியலுக்கு எவ்வித குறைவும் ஏற்படாத வகையில் அவர்களின் வாழ்க்கையை கொண்டு செல்வதற்கான நிலையை பேணும் மிக முக்

வருகின்றது. மின்சாரம், குடிதண்ணீர், எரிவாயு என்பனவற்றை குறைவில்லாமல் விநியோகிப்பதற்கான பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. உணவு, குடிதண்ணீர், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பதற்கான பொறுப்பை ஜனாதிபதி மற்றும் எனது வழிக்காட்டலின் கீழ் அலரி மாளிகையில் இருந்து அதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவதோடு அத்தியாவசிய சேவை தொடர்பாக ஜனாதிபதி விசேட படையணி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதேபோன்று அந்தச் செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுகின்றனவா என்பதை ஆராய்வதற்காக நாங்கள் வேலைத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த எடுக்கக்கூடிய சகல செயற்பாடுகளையும் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். 4 இலட்சத்து 10 ஆயிரம் பேர் வரை முதியோர் நிவாரணங்களை பெறுகின்றனர். எனினும் நாம் 4 இலட்சத்து 42 ஆயிரம் முதியோர்களுக்கு ஐயாயிரம் ரூபா என்ற அடிப்படையில் கொடுப்பனவை வழங்கியுள்ளோம். அதற்கு மேலாக அங்கவீனமானவர்களின் வாழ்வியல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியேற்பட்டது. 22 ஆயிரம் அங்கவீனமானவர்கள் அதற்கான கொடுப்பனவை பெற்று வந்தார்கள். மேலும் 38 ஆயிரம் பேருக்கு ஐயாயிரம் ரூபாவை வழங்கியுள்ளோம். விவசாயிகள் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேருக்கு நாம் கொடுப்பனவு வழங்கியுள்ளோம். அதேபோன்று 4600 மீனவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 25 ஆயிரம் சிறுநீரக நோயாளர்கள் காணப்பட்டார்கள். காத்திருப்புப் பட்டியலில் இருந்த 13,850 பேருக்கும் கொடுப்பனவை வழங்கினோம். கர்ப்பிணித் தாய்மார்கள், மந்த போசனத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அரச சேவையாளர்களின் ஊடாக திரிபோஉள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் ஓய்வூதியதாரர்கள் 6 லட்சத்து 45 ஆயிரம் பேருக்கு ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அரச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளமையினால் அரச சேவையாளர்கள் 15 லட்சம் பேர் வீடுகளில் உள்ளனர். எனினும் அந்த 15 லட்சம் பேருக்கும் ஏப்ரல் மாத சம்பளத்தை வழங்குவதற்கு இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிந்துவிட்டது. அது மாத்திரமல்ல. வேலையற்ற பட்டதாரிகள் 40 ஆயிரம் பேரை நாம் அரச சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தோம். அவர்களை இந்த தனிமைப்படுத்தல் செயற்பாடுகளில் இணைத்துக் கொண்டு பொருளாதாரத்தை வலுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். அது மாத்திரமன்றி சமுர்த்தி பயனாளர்கள் நாட்டில் 17 லட்சம் பேர் உள்ளனர். காத்திருப்புப் பட்டியலில் மேலும் 6 லட்சம் பேர் இருக்கின்றார்கள். இந்த 23 லட்சம் பேருக்கும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கி இந்த நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

நாம் இப்படி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் போது நாட்டில் நிறுத்தப்பட்டுள்ள வியாபாரங்கள் தொடர்பிலும் நினைத்துப் பார்க்க வேண்டியேற்பட்டது. இந்நாட்டில் முச்சக்கரவண்டி, பாடசாலை பஸ், வான்களின் ஊடாகத் தொழிற்துறையை முன்னெடுக்கும் 15 லட்சம் பேர் இருந்தனர். இவர்கள் அனைவருக்கும் நாம் தங்களது வாகனங்களுக்கான தவணைக் கொடுப்பனவை செலுத்துவதற்கான நிவாரணத்தை வழங்கியுள்ளோம். ஊரடங்குச் சட்டம் காரணமாக வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல

பக்கம் 10 »

**நாளை**
**09.04.2020**
**வியாழக்கிழமை**
**நட்சத்திரம்: சுவாதி பி.இ 03.38**
**திதி : துதியை பி.இ 04.18**
**இராகுகாலம் : 01.36 - 03.06**
**சுப நேரம் : 07.36 - 09.06**

# ஊரடங்கு நேரத்தில் உல்லாச குளியல் போட்ட வாலிபர் உக்ரைனில் கைது!



கொரோனா வைரஸ் தொற்றால் உலகமே பயந்து வீடுகளுக்குள் முடங்கி இருக்கும் நிலையில், உக்ரைனில் வாலிபர் ஒருவர் நதியில் உல்லாச குளியல் போட்டதால் பொலிஸார் கைது செய்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உலகின் பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் நாட்டில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஊரடங்கு உத்தரவு ஏப்ரல் 24ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் பூங்கா, கடற்கரை பகுதிகள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றிற்கு செல்லக்கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வாலிபர் ஒருவர் நீப்பர் நதியில் உல்லாசகமாக நீந்தி குளிக்கத் தொடங்கினார்.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிந்தது. சுமார் 10க்கும் மேற்பட்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அந்த வாலிபரை கரைக்கு வரும்படி எச்சரித்தனர். அவர் சுமார் அரைமணி நேரம் உல்லாச குளியல் போட்ட பின்தான் கரைக்குத் திரும்பினார். கரைக்கு திரும்பிய அவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்றம் இந்த வழக்கை 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. உக்ரைனில் இதுவரை ஆயிரத்து 462 பேர் கொரோனா தொற்றுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

# அமைதி ஒப்பந்தம் முறியும் தலிபான் திடீர் எச்சரிக்கை!

அமெரிக்காவுடனான அமைதி ஒப்பந்தம் விரைவில் முறியும் என தலிபான் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக நீடிக்கும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர தலிபான் அமைப்புடன் அமெரிக்கா பல மாதங்களாக பேச்சு நடத்தியது. இதன் பயனாக கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இருதரப்புக்கும் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஆப்கானிஸ்தான் அரசுக்கும், தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்படாததால் இந்த அமைதி ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் சிக்கல் நீடிக்கிறது.

இந்த நிலையில் அமெரிக்காவுடனான அமைதி ஒப்பந்தம் விரைவில் முறியும் என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஒப்பந்தத்தில் உறுதியளித்தபடி சிறையில் உள்ள 5 ஆயிரம் தலிபான் கைதிகளை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் தரவில்லை என தலிபான்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் ஒப்பந்தத்தை மீறி தங்கள் அமைப்பினர் மீது அமெரிக்க இராணுவம் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்துவதாகவும், இது நம்பிக்கை துரோகம் என்றும் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா தொடர்ந்து இதே போக்கை கையாண்டால் அந்த நாட்டு அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட அமைதி ஒப்பந்தம் விரைவில் முறியும் என்றும் எச்சரித்துள்ளனர்.

# தடை நீடிப்பு!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக நேபாள அரசு சர்வதேச விமான போக்குவரத்துக்கான தடையை ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீட்டித்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, கொரோனா வைரசால் உலகம் முழுவதும் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 13.5 லட்சத்தை தாண்டியுள்ளது. இதேபோல், கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 75 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதற்கிடையே, கொரோனா வைரசின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் அண்டை நாடான நேபாளம் உள்ளூர் விமான சேவைக்கு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரை தடை விதித்துள்ளது.

கொரோனா வைரசின் தாக்கம் உலகையே தொடர்ந்து அச்சுறுத்தி வரும் நிலையில், நேபாள அரசு சர்வதேச விமான போக்குவரத்துக்கான தடையை ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீட்டித்துள்ளது.

# 80 ஆயிரம் சாவுகள்

*கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆயிரத்தைத் தாண்டியது.*

*சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 206 நாடுகளுக்கும் மேலாகப் பரவிப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.*

*தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.*

*இதற்கிடையே, நேற்றிரவு நிலவரப்படி உலகம் முழுவதும் 13 லட்சத்து 65 ஆயிரத்து 166 பேருக்கு வைரஸ் தாக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இந்தநிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆயிரத்து தாண்டியுள்ளது.*

*இதுவரை 2 லட்சத்து 98 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 47 ஆயிரத்து 540 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக*

# கொரோனாவுக்கு மத்தியில் குடும்ப வன்முறை எகிறல்

## பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஐ.நா. செயலர் வலியுறுத்து

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில், குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதால், பெண்கள் பாதுகாப்புக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று உலக நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச வணிக நாளிதழான ‘பைனான்சியல் டைம்ஸ்’ நாளிதழ், கடந்த சனிக்கிழமையன்று ஒரு ஆராய்ச்சி கட்டுரை வெளியிட்டது.

அந்த கட்டுரையில் இடம் பெற்றிருந்த முக்கிய தகவல், கொரோனா வைரஸ் பரவத்தொடங்கிய காலம் தொட்டு பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை பெருகி உள்ளது என்பதுதான்.

மேலும், கொரோனா வைரஸ் தோன்றிய சீன நாட்டில் முக்கிய நகரங்களில் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து விவாகரத்து கோரி வழக்குகள் தொடர்வது அதிகரித்துள்ளதாக அந்த ஆராய்ச்சியில் தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சீனாவின் ஹூபெய் மாகாணத்தில் உள்ள கியாஞ் சியாங் நகரத்தில், பிப்ரவரி மாதத்தில் மட்டுமே 82 குடும்ப வன்முறை வழக்குகள் தாக்கலாகி உள்ளன. கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் 47 வழக்குகள் மட்டுமே பதிவாகி உள்ளன. இப்போது கொரோனா வைரஸ் பரவி வந்த நிலையில், இங்கு இந்த வழக்குகள் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெசுக்கு வேதனையை அளித்துள்ளது.

இதையொட்டி அவர் டுவிட்டரில் ஒரு வீடியோ செய்தி வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

கொரோனா வைரஸை தடுப்பதற்கு ஊரடங்கும், தனிமைப்படுத்தலும் அவசியம் என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இந்த காலகட்டத்தில் பெண்களும், பெண் பிள்ளைகளும் வீடுகளில் இருப்பவர்களால் தொல்லைக்கு ஆளாகிறார்கள்.

கடந்த சில வாரங்களாக, பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. பயமும் வளர்ந்து இருக்கிறது.

உலகளவில், குடும்ப வன்முறைகள் பெருகி வருவதை நாங்கள் பார்க்க முடிகிறது.

பாதிக்கப்பட்ட பெண்கள், ஆதரவுச் சேவையை அழைப்பது இரு மடங்காக அதிகரித்து உள்ளது.

கொரோனா வைரசை தடுப்பதற்காக உலக நாடுகள் பலவற்றிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், எந்த இடங்கள் பெண்களுக்கு மிகுந்த பாது காப்பானதாக இருக்க வேண்டுமோ, இந்த இடங்களில், அதாவது அவர்களின் சொந்த வீடுகளிலேயே அவர்கள் வன்முறையை எதிர்கொள்கிறார்கள்.

உலகம் எங்கும் உள்ள வீடுகளில் அமைதியும், சமாதானமும் நிலவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா தொற்று நோய் பரவலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறபோது, பெண்களின் பாதுகாப்புக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று அனைத்து நாடுகளின் அரசுகளை நான் கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# ஊரடங்கை நீடிப்பது குறித்து இந்திய அரசு தீவிர யோசனை

இந்தியா முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள 21 நாள் ஊரடங்கு உத்தரவு ஏப்ரல் 14ஆம் திகதி முடிவுக்கு வரும் நிலையில் அதனை நீட்டிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. கடந்த சில தினங்களில் மட்டும் நோய்த்தொற்று எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. தொடர்ந்து இதேபோல நோயாளிகள் எண்ணிக்கை உயர்ந்து வந்தால் அது மோசமான நிலைக்கு தள்ளிவிடும்.

கொரோனா நோய் அதிகமாக பரவாமல் தடுக்கவும், பெரிய அளவிலான சமூக தொற்றை தவிர்க்கவும் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 21 நாள்களுக்கு அறிவிக்கப்பட்ட இந்த ஊரடங்கு வருகிற 14ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளது. அதற்குள் நிலைமை கட்டுக்குள் வந்துவிடுமா? அல்லது மேலும் பாதிப்பு ஏற்படுத்துமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தற்போதுள்ள நிலவரத்தால் கலக்கம் அடைந்துள்ள பல்வேறு மாநில அரசுகள், நிபுணர்கள், ஊரடங்கு உத்தரவை மேலும் நீட்டிக்கவேண்டும் என மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர். பல்வேறு தலைவர்களும் இந்த யோசனையை கூறி உள்ளனர். எனவே, ஊரடங்கை நீட்டிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

நாடு முழுவதும் ஊரடங்கை நீட்டிக்காமல், அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மட்டும் நீட்டிக்கலாம் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில முதல் மந்திரிகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மத்திய மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஏற்கனவே ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

# ஒடிசாவில் நான்கு பேரை மிதித்தே கொன்ற யானை

## ஒரே குடும்பத்தவர்கள் மூவரும் அடக்கம்

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் யானை தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர்.

பராகர் மாவட்டத்தின் பத்மபூர் நகருக்கு அருகே உள்ள ராஜபாதா சாஹி என்ற கிராமத்தில் 75 வயதான முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தனது வீட்டு முன்பு படுத்து தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது அந்தக் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானை ஒன்று அந்த முதியவரை மிதித்துக் கொன்றது.

இதையடுத்து தொடர்ந்து அங்கேயே நின்று கொண்டிருந்த அந்த யானை அதிகாலையில் வீட்டில் இருந்து வெளியே வந்த அந்த முதியவரின் மகன் மற்றும் பேரனையும் மிதித்தது. இதில் அவர்கள் இருவரும் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

பின்னர் அங்கிருந்து சென்ற அந்த யானை பக்கத்து கிராமத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்த 52 வயது நபரையும் மிதித்துக் கொன்றது.

யானை தாக்கியதில் அடுத்தடுத்து 4 பேர் உயிரிழந்த சம்பவம் கிராம மக்களை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த வனத்துறையினர் யானையை காட்டுக்குள் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று அந்த பகுதியை சேர்ந்தவர்கள் வனத்துறையினரிடமும், பொலிஸாரிடமும் வலியுறுத்தினர்.

மேலும் யானைகள் ஊருக்கு புகுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# குஜராத்தில் 14 மாத சிசு கொரோனாவுக்குப் பலி

பிறந்து 14 மாதமே ஆன பச்சிளம் குழந்தை கொரோனாவுக்கு பலியான அதிர்ச்சிச் சம்பவம் குஜராத்தில் இடம்பெற்றுள்ளது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் வேகமாக பரவி வருகிறது. நாடு முழுவதும் இதுவரை 4789 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 124 பேர் உயிரிழந்துள்ளனர்.


இந்நிலையில், குஜராத் மாநிலம் ஜம்நகர் மாவட்டத்தை ஒரு தம்பதியின் 14 மாத பச்சிளம் ஆண் குழந்தை உடல்நலக்குறைவு காரணமாக மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது.

அந்த குழந்தையைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் நேற்று முன்தினம் குழந்தைக்கு கொரோனா வைரஸ் பரவி இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

மேலும், குழந்தையின் பல்வேறு உடல் உறுப்புகள் தொடர்ந்து செயலிழந்து வந்து கொண்டிருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த மருத்துவர்கள் குழந்தைக்கு செயற்கை சுவாசக்கருவி பொறுத்தி தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

இந்நிலையில், இரண்டு நாள்களாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த 14 மாத பச்சிளம் குழந்தை நேற்று மாலை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தது. இதனால் குழந்தையின் பெற்றோர், டாக்டர்கள் உள்பட அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இந்தியாவில் பிறந்து 14 மாதங்களேயான பச்சிளம் குழந்தை உயிரிழந்துள்ளதால் மக்கள் மிகுந்த அதிர்ச்சியும், அச்சமும் அடைந்துள்ளனர்.



# தமிழகத்தில் நேற்றுவரை 690 பேருக்குத் தொற்று

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

நேற்றுமுன்தினம் இந்த எண்ணிக்கை 621 ஆக உயர்ந்திருந்தது. இந்த நிலையில், தமிழகத்தில் நேற்று மேலும் 69 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 690 ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழக சுகாதாரத்துறை செயலாளர் பீலா ராஜேஷ் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் மேலும் 69 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 690 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து பலி எண்ணிக்கை 7ஆனது. கொரோனா வைரஸ் சிகிச்சை பெற்ற 19 பேர் குணமடைந்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.

# நாளை முதல் மேற்கு வங்கத்தில் மலர்ச் சந்தை திறக்கப்படுகிறது

## முதல்வர் மம்தா அறிவிப்பு

மேற்கு வங்காளத்தில் மலர்கள் சந்தை நாளை முதல் திறக்கப்படும் என முதல் மந்திரி மம்தா பானர்ஜி அறிவித்தார்.

இந்தியாவில். மத்திய அரசு பிறப்பித்த 21 நாள்களுக்கு ஊரடங்கு நீடிக்கும் என்ற உத்தரவால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி போயுள்ளது. அன்றாட தேவைகளான பால், மருந்து, மற்றும் பொருட்களை வாங்குவதற்கான கடைகளே திறந்திருக்கும் என கூறப்பட்டு உள்ளது.

கொரோனாவுக்கு மேற்கு வங்காளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்து உள்ளது. புதிய பாதிப்பு எண்ணிக்கை 8 ஆக உள்ளது.



இதனால் மொத்த எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது என முதல்வர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

நாளை முதல் மலர்கள் சந்தை திறக்கப்படும். இதனால் மொத்த விநியோகஸ்தர்கள் நேரடியாக சந்தைகளில் விற்றுக் கொள்ளலாம். அவர்களைப் பொலிஸார் தடுக்கமாட்டார்கள் என கூறியுள்ளார்.

நாடு முழுவதும் மத்திய அரசின் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும்பொழுது, மம்தா பானர்ஜியின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரு லட்சம் பேருக்குத் தினமும் இந்தியாவில் இனிச் சோதனை

## கொரோனா தொற்று ஏற்பட்டோரைக் கண்டறிவதற்காக



புதிய சோதனை கருவிகள் வந்திருப்பதன் மூலம் இனி இந்தியாவில் தினமும் 1 லட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்ய முடியும் என இந்திய மருத்துவச் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தற்போது பழைய முறைப்படி கொரோனா பரிசோதனை நடந்து வருகிறது. இதன்படி ஒவ்வொரு பரிசோதனை நடப்பதற்கும் பல மணி நேரம் ஆகின்றது. இதனால் அதிகம் பேருக்கு பரிசோதனை நடத்த முடியவில்லை. ஒரு நாளைக்கு 18 ஆயிரம் சோதனைகள்தான் நடத்த முடிகிறது.

நேற்று வரை 96 ஆயிரத்து 264 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. நோயாளிகளை விரைவில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் தான் நோய் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலை இருப்பதால் அதற்கு தேவையான கருவிகளை வாங்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது.

இதற்கான ஆய்வகங்கள் மற்றும் பரிசோதனை கூடங்களையும் அதிகப்படுத்தியது. இதன்படி 136 அரசு ஆய்வகங்களும், 56 தனியார் ஆய்வகங்களும் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

மேலும் பல ஆய்வகங்களை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக இந்திய மருத்துவச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:-

புதிய முறையில் சோதனை நடத்தும் 10 லட்சம் ஆர்.டி.பி.சி.ஆர். கருவிகள் மற்றும் அதற்கான சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விரைவாக சோதனை நடத்த முடியும்.

இவற்றை நாடு முழுவதும் அனைத்து இடங்களுக்கும் தடையின்றி வழங்குவதற்கு 7 நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசு ஆய்வகங்கள் மட்டுமல்லாமல், தனியார் ஆய்வகங்களும் சோதனைகளைச் செய்ய ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் 200க்கும் மேற்பட்ட ஆய்வகங்களை உருவாக்கி உள்ளோம். புதிய சோதனை கருவிகள் வந்திருப்பதன் மூலம் இனி ஒரு நாளைக்கு 1 லட்சம் பேர் வரை சோதனை செய்ய முடியும். இதனால் விரைவாக நோயாளிகளை கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுதவிர சோதனை நடத்தும் உயர்தர கருவிகளான கோபாஸ் - 6800 என்ற 2 கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. இதில் ஒரே நேரத்தில் ஆயிரத்து 400 மாதிரிகளை சோதிக்க முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் குறித்து உலக தலைவர்களின் சர்ச்சைச் கருத்துகளும், வேடிக்கைப் பிரசாரங்களும்

உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதித்துள்ளது. இந்த நோயை முற்றிலும் ஒழிக்க உலகம் முழுவதும் சுகாதாரப் பணியாளர்கள் போராடி வருகின்றனர்.

ஆனால் இதே காலகட்டத்தில் கோவிட் 19 வைரஸ் தொற்று குறித்துப் பேசும் உலகத் தலைவர்கள் சிலர் சில நேரங்களில் பொருத்தமற்ற கருத்துகளைப் பேசுகின்றனர், பொருத்தமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மேலும் வைரஸ் குறித்து சில தவறான தகவல்களையும் அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில வாரங்களில் சில தலைவர்கள் இந்த உலகளாவிய தொற்றை அணுகும் முறை மாறியுள்ளது. எடுத்துக்காட்டாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மேற்கொள்ளும் அணுகு முறையைக் கூறலாம். ஆனால் இன்னும் சிலர் தங்கள் எதிர்மறையான, ஆபத்தான நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளவே இல்லை.

இப்படி உலகத் தலைவர்கள் சிலர் கொரோனா பற்றிப் பேசிய சர்ச்சையான மற்றும் தவறான கருத்துகளின் தொகுப்பு இது.

**"நாங்கள் வைரஸைக் கட்டுக்குள் வைத்துள்ளோம்"**

அமெரிக்காவில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதை உறுதிசெய்து இரண்டு நாள்களுக்கு பிறகு ஜனவரி 22ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கொரோனா வைரஸ் தொற்று குறித்து சி.என்.பி.சி. செய்திக்கு அளித்த நேர்காணலில் இவ்வாறு கூறினார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இப்போது உலகிலேயே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடாக அமெரிக்கா இருக்கிறது. நேற்று ஏப்ரல் 7 ஆம் திகதி நிலைவரப்படி அமெரிக்காவில் மட்டும் 3லட்சத்து 68 ஆயிரம் 376 பேருக்கு கொரோனா பாதிப்பு உள்ளது என்று ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவிக்கிறது.

இதுவரை இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவில் மருத்துவ உபகரணங்களும் போதிய எண்ணிக்கையில் இல்லை. அங்கு மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மேலும் கொரோனாவால் அமெரிக்காவில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 2,50,000ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது என அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

* * *

**"இது சாதாரண பறவைக்காய்ச்சல் போன்றது"**

பிரேசில் பிரதமர் சயிர் போல்சனாரூ பல சர்ச்சைக்குரிய கருத்துகளை முன்வைத்துள்ளார். சமீபத்தில் அவர் அளித்த தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் இந்த தொற்று குறித்து அவர் இப்படிக் கூறிய கருத்துகளால் பலர் சாலைகளுக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தனது உரையின்போது கொரோனா வைரஸின் அபாயங்களை குறைத்துமதிப்பிட்டமையோடு, சமூக இடைவெளி குறித்து அவர் கருத்துகளை மிகவும் தைரியமாக முன்வைப்பதுபோல காட்டிக் கொண்டார்.

பிரேசிலில் உள்ள மாகாண ஆளுநர்கள் தங்கள் மாகாணத்தை முடக்க முயற்சித்து வெளியிடும் அறிக்கைகளுக்கு எதிராகவும் இவர் அழுத்தம் கொடுக்கிறார். பிரேசில் சுகாதாரத்துறை அளித்த தகவலின் படி கடந்த வாரம் நான்கே நாட்களின் அந்த நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 7,000ஐக் கடந்துள்ளது.

* * *

**"உங்களுக்குத் தொல்லை கொடுப்பதற்கு பதிலாக உங்களைப் புதைத்து விடுகிறேன்"**

பிலிப்பீன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுடெர்டோ தனது நாட்டு மக்களிடம் இந்த மிரட்டலை விடுத்தார். கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து நாட்டை காப்பாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ரோட்ரிகோ டுடெர்டே மேற்கொண்டார். நாட்டை முடக்குதல், சமூக இடைவெளி குறித்த விழிப்புணர்வு என பல கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. ஆனால்உணவுப் பற்றாக்குறையால் அங்கு போராட்டம் நடைபெற்றது.

விதியை மீறி போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்துவர் என்று அதிபர் அப்போது எச்சரித்தார்.

"அரசாங்கத்தை மிரட்ட வேண்டாம். அரசாங்கத்திற்கு சவால் விடாதீர்கள். நீங்கள் தோற்று விடுவீர்கள்," என்று ஏப்ரல் 2 ஆம் திகதி பத்திரிக்கையாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார் அவர்.

பிலிப்பீன்ஸில் 2,300 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**"இங்கு வைரஸ் பறப்பதை நீங்கள் பார்த்தீர்களா? இங்கு வைரஸ் எதுவும் இல்லை"**

பெலாரஸ் அதிபர் அலெக்ஸாண்டர் லூக்காஷென்கோ மற்றவர்கள் புருவத்தை உயர்த்தும் அளவிற்கு கொரோனா பாதிப்பை வேடிக்கையாகக் கையாண்டார்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க முயற்சிக்க வேண்டும் என்ற ஆலோசனையை கேட்டு சிரித்தபடியே "வைரஸ் இங்கு சுற்றித் திரிவதை என்னால் பார்க்க முடியவில்லை" என்றுகூறினார்.

உள்ளரங்கில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியை கண்டு களித்தவாறு தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், இந்த அரங்கில் உள்ள மக்கள் அனைவரும் குளுமையில் இருப்பதால் அவர்கள் நலமுடன் இருக்கிறார்கள், அவர்களை வைரஸ் தாக்காது என்று கூறினார்.

வைரஸ் குறித்த அச்சங்களைப் பற்றி குறிப்பிட்ட அவர், இது ஒரு மனநோயைத் தவிர வேறொன்றுமில்லை என்று விவரித்தார். ஓட்கா உள்ளிட்ட சில மதுபானங்கள் நம்மை வைரஸ் பாதிப்பில் இருந்து காப்பாற்றும் எனவும் அவர் கூறினார். பிறகு அவரே இந்த கருத்துகள் கேலியானவை என்று கூறி பின்வாங்கினார்.

ஐரோப்பாவில் ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட நாடு பெலாரஸ். இங்கு 150க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

* * *

**"உங்கள் குடும்பதினரை சாப்பிட வெளியே அழைத்துச் செல்லுங்கள்"**

மெக்சிகோ அதிபர் ஆண்ட்ரஸ் மானுவேல், கோவிட் 19 வைரஸ் பரவுவது குறித்து பொது சுகாதார துறை அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் தொடர்ந்து முரண்பட்டார்.

மேலும் பரவி வரும் வைரஸ் பாதிப்பை பொருட்படுத்தாமல் நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு,அவர்சந்தித்தசிலகுழந்தைகளுக்கு முத்தமும் தந்தார்.

அமெரிக்கா போல மெக்சிகோவில் இது வரை பாதிப்பு ஏற்படவில்லை என்றாலும் மெக்சிகோவில் 7,00,000 பேர் வைரஸால் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. மார்ச் 30 ஆம் திகதி மெக்சிகோவில் சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டாலும், 50 பேர் வரை கூடும் பொதுக்கூட்டங்கள் இன்னும் நடைபெற்றுதான் வருகின்றன.

* * *

**"தடைகள் விதித்த நாடுகளை தண்டிக்க இறைவன் கொரோனா வைரஸைப் படைத்துள்ளார்"**

ஸிம்பாப்வே அதிபர் எமர்சன் முனங்காக்வா சர்ச்சையான கருத்து எதையும் கூறவில்லை. ஆனால் தமது அமைச்சர் ஒருவர் கூறிய கருத்தை அவர் சமாளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

தங்கள் நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதித்த மேற்கத்திய நாடுகளை கடவுள் கொரோனா வைரஸ் மூலம் பழிவாங்குவதாக ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சர் ஒப்பா முச்சின்குரி கூறிய கருத்தை மறுத்து முனங்காக்வா கருத்துத் தெரிவித்தார்.

இந்த மாதிரியான வைரஸ் தொற்றுக்கு விஞ்ஞான விளக்கங்கள் உள்ளன, வைரஸுக்கு எல்லைகள் இல்லை, மற்ற இயற்கை நிகழ்வுகளைப் போல இதற்காகவும் யாரையும் குறை சொல்ல முடியாது என்று எமர்சன் முனங்காக்வா கூறினார்.

போதிய மருத்துவ வசதிகள் இல்லாத வறுமை மிக்க நாடு இது என்பதால், கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்தால் இங்கே அதிகம் பாதிப்பு இருக்கும் என்று அச்சம் நிலவுகிறது.

* * *

**"அமெரிக்காவிற்கு எதிரானவர்களையே இந்த வைரஸ் அதிகம் பாதித்துள்ளது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அமெரிக்காவின் எதிரிகளிடையே கொரோனா வைரஸை பரப்பியுள்ளார்"**

செல்வாக்குமிக்க ஈராக்கின் ஷியா பிரிவு மதகுரு முக்தாதா அல் சதர் இப்படிக் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தவிர இன்னும் நிறைய சர்ச்சைகளுக்கு முக்தாதா அல் சதர் காரணமாகிவிட்டார்.

சமீபத்தில் வாரங்களில்,ஈராக் அதிகாரிகள் வைரஸைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை விட்டு விட்டு, தொடர்ந்து பெரிய அளவில் பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தும் படி இவர் அறிவுறுத்தினார்.

இது தவிர ஒரு பாலினத்தவர்கள் திருமணம் செய்யும் சட்டத்தை நடைமுறைப்படுத்த விரும்பிய நாடுகளே கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இவர் கூறினார். எடுத்துக்காட்டாக சீனா மற்றும் இத்தாலியை இவர் சுட்டிக்காட்டினார். எனவே இந்த சட்டத்தை நிராகரிக்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் ட்விட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி ஈராக்கில் கொரோனா வைரஸால் நிறைய உயிரிழப்புகள் ஏற்படும் என்று கருதப்படுகிறது.

* * *

"நாட்டில் கோவிட் 19 பாதிப்புகள் குறித்த தகவல்களை வேண்டுமென்றே தடுத்து நிறுத்தினார் என இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, ஒப்புக்கொள்கிறார். மக்கள் பீதி அடைந்து உணவுப்பொருள்கள் மற்றும் தேவையான பொருள்களை வாங்க அதிகம் நடமாட ஆரம்பிப்பார்கள் என்பதால் அமைதி காத்தார் எனக் கூறுகிறார்.

**"வைரஸ் குறித்த சில தகவல்களை பொது மக்களிடம் கூறி, அச்சத்தை அதிகரிக்க விரும்பவில்லை"**

இந்தோனேசியாவில் மார்ச் 2 ஆம் திகதி ஒருவர் கூட கோவிட் 19 வைரசால் பாதிக்கப்படவில்லை. ஆனால் தற்போது 1500 க்கும் அதிகமானோருக்கு அங்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மார்ச் 31 ஆம் திகதி அங்கு தேசிய அவசர நிலையும் அறிவிக்கப்பட்டது.

சில மூலிகை பானங்கள் இந்தோனேசிய மக்களுக்குகொரோனாவைரஸைஎதிர்கொள்ளும் சக்தியை கொடுத்துள்ளது என அந்நாட்டு தேசியப் பேரிடர் அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

* * *

**"நோயாளிகளுக்கு நான் கை கொடுத்தேன்"**

பிரிட்டன் பிரதமர்

மார்ச் 3 ஆம் திகதி பிரிட்டனில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில், "நேற்று இரவு மருத்துவமனையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, நான் கைகொடுத்தேன், கை குலுக்குவதால் தொற்று பரவும் என்ற கருத்தை பொருட்படுத்த வேண்டாம்" என்றார்.

ஆனால் உண்மையில் மருத்துவமனையில் இருந்த ஊழியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் மட்டுமே போரிஸ் ஜோன்சன் கை குலுக்கியமை தெரிய வந்தது.

மார்ச் 27 ஆம் திகதி போரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கருத்துச் சுதந்திரம் மீதான கெடுபிடிக் கட்டுப்பாடுகளில் மிகுந்த அவதானம் அவசியம்

## வதந்தி பரப்பினால் ஐந்து வருடச் சிறை என்ற அறிவிப்புக் குறித்து ஊடகத் தரப்பு எதிர்வினை

சமூக வலைத்தளங்களில் கொரோனா தொடர்பிலான வதந்திகளை பரப்பினால் குறைந்தபட்சம் ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஸ்ரீலங்காவின் முன்னணி ஊடகவியலாளர் அமைப்புக்கள் கூட்டாக இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அதில் நாடு ஒரு பேரிடருக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில் கருத்துச் சுதந்திரத்திற்கும், மொழி பயன்பாட்டிற்கும் சில வரையறைகள் இருக்க வேண்டியது அவசியமாகின்ற போதிலும் ஜனநாயகத்துடனும், ஏனைய மனித உரிமைகளுடனும் தொடர்புபட்ட விடயங்களாக இருப்பதால் மிகவும் அவதானத்துடனும் பரந்துபட்ட புரிதலுடனும் அந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று அவை வலியுறுத்தியுள்ளன.

பேரிடர் காலங்களில் வதந்திகளும், போலியான தகவல்களும் வெளியிடப்படுவதால் சமூகத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்பதை பொறுப்புவாய்ந்த ஊடகவியலாளர் அமைப்புக்களான தாங்களும் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதனால் அவ்வாறான வதந்திகள் மற்றும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சமூகமயப்படுத்துவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், ஊடகவியலாளர் அமைப்புக்களான தாங்களும் தனித்தும், கூட்டாகவும் இவ்வாறான தகவல்கள் சமூகமயப்படுத்துவதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அறிவித்துள்ளன.

எனினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றை தடுப்பதற்காகவெனக் கூறி கைதுசெய்து, தண்டிக்க நடவடிக்கை எடுப்பது தீர்வாக அமையாது என்றும் ஊடகவியலாளர் அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.



வதந்திகளும், உண்மைக்குப் புறம்பான தகவல்களும் சமூக மயமாவதை தடுக்க வேண்டுமானால் உண்மையான தகவல்களை அதிகளவில் சமூகமயப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள ஊடகவியலாளர் அமைப்புக்கள், இந்த செயலால் மக்களின் உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றன.

அதேவேளை வதந்திகளையும், உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுவதை தடுக்கும் நடவடிக்கைகள் சமூக வலைத்தளங்களுக்கு மாத்திரமன்றி ஏராளமான பார்வையாளர்களை கொண்டிருக்கும் தொலைக்காட்சிகள் உள்ளிட்ட இலத்திரனியல் ஊடகங்களுக்கும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன.

தொலைக்காட்சிகள் உட்பட நாட்டின் பிரதான ஊடகங்கள் கொரோனா வைரஸால் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடியான கால கட்டத்திலும் இனவாதத்தை தூண்டும் வகையில் பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றமையைத் தடுக்கும் வகையில் ஊடகங்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் அடங்கிய வழிகாட்டிகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் அதன் ஊடாக சிறந்த ஊடக பாவனைக்கான வழிகாட்டிகளை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.



அதேவேளை பொலிஸ் தலைமையகம் வெளியிடப்படும் அறிக்கைகள் சிங்கள மொழியில் மாத்திரம் இருக்கக்கூடாது என்றும் ஊடகவியலாளர் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. சிங்கள மொழியில் மாத்திரம் முக்கியமான அறிக்கைகளை வெளியிடுவதால் அதிலுள்ள கட்டுப்பாடுகளை ஏனைய சமூகத்தினரால் அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படுவது மாத்திரமன்றி அவர்கள் தண்டிக்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

இதனால் பொலிஸ் தலைமையகம் உட்பட அரசாங்கம் வெளியிடும் அனைத்து அறிக்கைகளும் நாட்டின் நடைமுறையிலுள்ள அனைத்து நிர்வாக மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டிதன் அவசியத்தையும் ஊடகவியலாளர் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லீம் மீடியா போரம், சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு, தொழில்சார் ஊடகவியலாளர் சங்கம், இணையத்தள ஊடகவியலாளர் அமைப்பு, இளைய ஊடகவியலாளர் சங்கம் உட்பட முன்னணி ஊடகவியலாளர் அமைப்புக்கள் இணைந்து இந்த அவசர அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# ஒரு நாளைக்கு 10 ஆயிரம் பேரை சோதனை செய்தால்தான் ஒரு மாதத்தில் ஓரளவாவது நாடு மீண்டு வர வாய்ப்புக் கிட்டும்

## அதற்கு தினசரி ரூ.16 கோடி செலவாகும்; அதனை எதிர்கொள்ள அரசு தயாரா?

இலங்கை அரசாங்க மருத்துவர் சங்கம் (GMOA) கொரோனோவின் தாக்கம் குறித்து பரிசோதனைகளை (Testing) அதிகரிக்க வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்தி இருக்கிறது. இன்றைய நிலையில் நாள் தோறும் 250 பேர் மட்டும் பரிசோதனை செய்யப்படுகிறார்கள் என சொல்லப்படுகிறது .

தற்போதைய நிலையில் 750 - 1000 பரிசோதனைகள் செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தும் 250 பரிசோதனைகள் மட்டும் செய்யப்படுவது பற்றி மருத்துவர் சங்கம் கேள்வி எழுப்பி இருக்கிறது.

கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த பரவலான முறையில் பரிசோதனைகளை அதிகரிப்பது தான் இன்றைய நிலையில் அவசியமானது. இலங்கை போன்ற வறுமையான நாடு ஒன்றில் அப்பாவி பொதுமக்களை இராணுவப் பாணியில் நீண்ட காலத்திற்கு பூட்டி வைக்க முடியாது.

இன்றைக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் மகத்தான பணிகளினால் மட்டுமே பல குடும்பங்ககளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன .

இலங்கையின் சனத்தொகையில் 4.1 % ஆன பொதுமக்கள் வறுமை கோட்டுக்குள் வாழுகிறார்கள். இலங்கையில் தொழில் செய்யும் 58 % (ஏறத்தாழ 47 லட்சம்) பொதுமக்கள் நாளாந்த வருமானம் உழைக்கும் வகுப்பையும் சுய தொழிலையும் நம்பி இருக்கிறார்கள். இலங்கையில் தொழில் செய்யும் 81 லட்சம் பொதுமக்களில் 0.8 % ஆன பொதுமக்களின் நாளாந்த வருமானம் 1.9 வருமானத்திற்கும் குறைவானது. இந்த குடும்பங்கள் எல்லாம் இப்போது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிறார்கள் . அரசாங்கத்தால் இதுவரை இந்த பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்ற காத்திரமான நல திட்டத்தை முன் வைக்க முடியவில்லை.

மறுபுறம் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி நிறுவனங்கள் நலன்நோன்பு திட்டங்களை செய்ய தேவையான பணத்தை பெற்று கொள்ளுவதற்கு ஆளுநர்கள் ஊடக அரசாங்கம் தடை ஏற்படுத்தி வருகிறது. பேரிடர் காலத்தில் கூட கீழ்த்தரமான இனவாத அரசியல் செய்கிறார்கள்

இந்த சூழலில் மிக விரைவாக கொரோனோவின் தாக்கத்தில் கடந்து போக, பரவலான பரிசோதனைகள் அவசியம் என்கிற இலங்கை அரசாங்க மருத்துவர் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது.

இலங்கை முழுவதிலுமிருந்து சந்தேகிக்கப்படும் அனைத்து பொதுமக்களையும் நாம் சோதிக்க வேண்டும். குறைந்தபட்சம் நாள் தோறும் 5,000 முதல் 10,000 பொதுமக்களை சோதனை செய்ய தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு பரிசோதனை கருவிகளும் (Test Kid) இலங்கை பெறுமதி 16,000 ரூபாவாக இருக்கிறது. ஆகவே பரிசோதனைக்கு நாள் தோறும் 16 கோடி ரூபா செலவாகும். குறைந்த பட்சம் ஒரு மாதம் 480 கோடி ரூபா செலவாகும். ஆனால் இதில் சமரசம் செய்ய முடி யாது. காத்திருக்கும் ஒவ்வொரு நாளும் மருத்துவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இலங்கைக்கு ஆபத்தானது.

பரிசோதனைகளில் நோயாளிகளாக கண்டறியப்பட்டால், அவர்களின் தொடர்புகள் கண்டறியப்பட வேண்டும். அதே போல அறிகுறிகள் உள்ளவர்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். பாதிக்கப்படாதவர்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட வேண்டும். அடையாளம் காணப்படுகின்றவர்க ளுக்கு உரிய மருத்துவ வசதிகள் செய்யப் பட வேண்டும் . இலங்கையில் 570 தீவிர சிகிச்சைப் பிரிவுப் படுக்கைகள் இருக்கின்றன எனச் சொல்லுகிறார்கள் . 2,500 பேரை மட்டுமே கையாள கூடிய வசதிகள் இருப்பதாக மருத்துவர் சங்கம் சொல் லுகிறது .ஆகவே அரசாங்கம் இனியும் தாமதிக்காது விரைவாக செயல்பட வேண் டிய நேரம் இதுவாகதான் இருக்க முடியும். சரியான முறையில் செயல்பட்டால் ஒரு மாதத்திற்குள் கொரோனோவின் பாதிப்பில் இருந்து மீண்டு வர முடியும்.







# வாழ்வா, சாவா...

(நான்காம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நபர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி தற்போது சிறிய மற்றும் மத்தியதர வியாபாரங்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளது.

நாம் இவ்வாறான நிதியை ஒதுக்கி மக்களுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுத்தது நாடாளுமன்றத்தில் வரவு!செலவுத் திட்டத்தை நிறைவேற்றி அல்ல. இவற்றில் ஒன்றையாவது மேற்கொள்வதற்கு ஜனாதிபதி அவர்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பை பெற்று கொள்ள இடம் காணப்படவில்லை. நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு முன்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இடைக்கால வரவு ! செலவு திட்டத்தை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் எங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறான நிலையில் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதனால் என்ன பயன் ஏற்படப் போகின்றது என இறையாண்மையுள்ள மக்கள் இப்போது எங்கள் எல்லோரிடமும் கேட்கின்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 50 லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு அரசின் நேரடி நிவாரணம் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பங்களில் நாங்கள் வாத விவாதங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை. நாட்டில் நான்கில் ஒரு பகுதி மக்களுக்கு நாங்கள் நிவாரணத்தை வழங்கியது நாட்டின் வருமானம் சிறந்த முறையில் இருந்த போது அல்ல. இப்போது அரசுக்கு வருமானம் கிடைக்கப்பெறும் சகல வழிகளும் சூனியமாகிவிட்டன.

இந்த வைரஸ் பரவல் காரணமாக எங்களது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவது தடைப்பட்டுள்ளது. அவ்வாறு தடைப்பட்டது நாட்டுக்கு வருமானம் கிடைக்கும் பிரதான வழியாகும். தற்போது சர்வதேசத்தில் தேயிலைக்கு ஏலம் எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. எங்களது தேயிலை, தேங்காய், இறப்பர் ஆகிய மூன்று உற்பத்திகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாது. இத்தாலி, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பணியாளர்கள் அனுப்பும் பணம் எங்களது நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காகும். அந்த வருமானமும் கொரோனா நோய் தாக்கம் காரணமாக இலங்கைக்குக் கிடைக்கப்பெறாது.

உலகம் முழுவதும் சுற்றுலா தொழிற்துறை பாதிப்படைந்துள்ளது. சர்வதேச விமான சேவை நிறுவனங்கள் தொடக்கம் எங்களது கடற்கரை சிப்பிகளுக்கும் கூட பாதிப்பு ஏற்படும். தற்போது உலக நாடுகளை போன்று எங்களது நாட்டில் உள்ள சுற்றுலா ஹோட்டல்கள், உணவு விடுதிகள் போக்குவரத்து துறைகள் என்பன சீர்குலைந்துள்ளன. அவ்வாறான நிலையின் கீழ்தான் எங்களுக்கு இந்த நோய் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் நாம் இல்லையயன்று சொல்ல மாட்டோம். மக்களுக்கு முடியாது என்று சொல்ல மாட்டோம். இந்தப் போரை நாம் கைவிடப் போவதில்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அரசியல், இனம், மதம் என்ற ரீதியில் நினைத்து தீர்மானங்களை எடுத்ததில்லை. எடுக்கவும் போவதில்லை. சகல அரசியல் கட்சித் தலைவர்களும் மிகவும் ஆர்வத்துடன் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்த தருணம் இது. மதம், இனம் என்ற ரீதியில் பிரிந்து செயற்படக் கூடிய காலம் அல்ல. இந்த நேரத்தில் எங்களுக்கு இருக்க வேண்டியது ஒரே எதிரி மாத்திரமே. அது கொரோனா எனும் எதிரியே. நாங்கள் எந்த மதமாக இருந்தாலும், எந்த இனமாக இருந்தாலும், இந்த உண்மையை நாம் அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும். மகாநாயக்க தேரர்கள் தற்போது கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த பக் பௌர்ணமி தினத்தில் விஹாரைகளுக்கு வர வேண்டாம் என்று. இதுபோன்று மனிதர்கள் தொடர்பில் அன்பு செலுத்தக்கூடிய வகையிலான கருத்துத்தான் இது. அதனால் நாம் அனைவரும் வாழும் நபர்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இது மதத்துக்கும் இனத்துக்கும் விசேட தேவைகளையும் சடங்குகளையும் நிறைவேற்றும் நேரமல்ல. இது நாடு தொடர்பில் சிந்திக்க வேண்டிய நேரம். பொதுவாக மனிதர்கள் என்ற ரீதியில் சிந்தித்தால் மாத்திரமே எங்களுக்கு இந்த புதை குழியில் இருந்து மறுபக்கத்துக்குப் பாய்ந்து செல்ல முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகள், மனைவி ஆகியோர் வீட்டில் இருக்கும் போது தனக்கு நோய் தொற்று ஏற்படும் என்பதை தெரிந்துக் கொண்டே நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள், சுகாதார துறை ஊழியர்கள் எங்களுக்கு இருக்கின்றார்கள். ஒருசில வைத்தியர்கள் தனது உடலில் கொரோனா பொசிடிவ் ஏற்படும் வரை வைத்தியசாலையில் இருந்து செல்ல போவதில்லையென குறிப்பிட்டுத் தொழில் புரிகின்றனர். வேறு நாடுகளில் முக கவசம் வழங்கப்படவில்லையென குறிப்பிட்டு சேவையை தூக்கியயறிந்து சென்ற தாதியர்கள் இருக்கின்றார்கள். எனினும் நாம் பெருமையோடு கூறுகின்றோம் ! எங்களது நாட்டில் தங்களுக்கான முக கவசத்தை அவர்களே தைத்துக் கொண்டு பொறுப்புடன் சேவை புரியும் தாதி பரம்பரையினர் இருக்கின்றார்கள் என்று. வைத்தியசாலையின் உப ஊழியர்கள், நோயாளி காவு வண்டியின் சாரதிகள் எந்தவொரு நோயாளியையும் கைவிடவில்லை. அதேப்போன்று மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அதனை கூடக் கவனத்திற் கொள்ளாமல் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று சேவையாற்றும் சுகாதார பரிசோதகர்கள் எங்களுக்கு உள்ளார்கள். நீங்களும் நானும் வாழ்வது அவ்வாறான சுகாதார சேவையுள்ள நாட்டிலேயே. அதேபோன்று ஏனைய அனைத்துச் சேவைகளையும் பொறுப்புடன் நிறைவேற்றும் அரச சேவையாளர்களை ஞாபகப்படுத்த வேண்டும். அதேபோன்று எங்களது மாகாண மட்டத்திலான நிர்வாகத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களை நாங்கள் பாராட்ட வேண்டும்.

அன்று தங்களுக்கு மரணம் ஏற்படப் போகின்றது என்பதை தெரிந்து கொண்டே முப்படை, பொலிஸ் சேவையில் இணைந்த இளைஞர்கள் இன்று எந்த இடத்தில் வைரஸ் இருக்கின்றது என்பதை தேடிச் செல்கின்றனர். தங்களின் இருப்பிடங்களை நோயாளிகளுக்கு வழங்கிவிட்டு அவர்கள் சீமெந்து தரையில் தூங்குகின்றனர். அது மாத்திரமன்றி எங்களது லட்சக்கணக்கான பிள்ளைகள் இந்த கொரோனா வைரஸுக்கு எதிரான செயற்பாட்டுக்கு உதவி வழங்குவதற்காக நாங்கள் அழைக்கும் வரை வீடுகளில் தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறான நாட்டில் நீங்கள் தனிமைப்பட மாட்டீர்கள்.

நாங்கள் நீண்ட காலம் எடுத்துக்கொள்ளாமல் விரைவாக இந்த நோய்த் தொற்றை வெற்றி கொள்ள வேண்டும். அதேபோன்று உங்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நான் உங்களிடம் பணிவாக கேருகின்றேன். இந்த நோய்த் தொற்றைத் தோற்கடிக்கும் முறை தொடர்பில் எங்களுக்கு இப்பொழுதே சிந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் உற்பத்திக்கு, விநியோகத்திற்கு, வர்த்தகத்திற்கு, அரசாங்கத்தின் தலையீட்டை இல்லாமல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் கடந்த கால அரசாங்கம் செயற்பட்டது. இன்று எங்களுக்கு கூட்டுறவுத் துறை ஞாபகம் வருகின்றது. உணவு பானங்களைப் போன்று பட்டத்தை கூட வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்து இலாபம் என்று சொல்லும் எண்ணத்துக்கு அமையத்தான் அந்த அரசாங்கங்கள் வேலைசெய்தன. தன்னிறைவான வீட்டுக்காக நாம் ஏற்படுத்திய வீட்டுத் தோட்ட பயிர்களைப் போன்று வயல் நிலங்களின் பயிர்ச் செய்கை என்பன கடந்த யுகத்தில் சரிவடைந்தன. இப்பொழுது தான் மீண்டும் இந்த நாட்டு மக்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். கொழும்பு நகரில் இருந்து தொலைதூரமுள்ள கிராமங்கள் வரை சகல வீட்டு தோட்டங்களிலும் பயிர் செய்யத் தயாராகும் சத்தம் எங்களுக்கு கேட்கின்றது. எங்களுக்கு தேவையான உணவை நாங்களே உற்பத்தி செய்வதற்கு மக்கள் தயாராகியுள்ளமை எங்களுக்குத் தெரிகின்றது. நாங்கள் அந்த எல்லா செயற்பாடுகளையும் வலுப்படுத்துவோம். தேசிய கொடியை வெளிநாடுகளில் இருந்து தைத்து கொண்டு வந்த நாம், எங்களுக்கு தேவையான முக கவசங்களை நாங்களே தைப்பதற்கு ஆரம்பித்து விட்டோம். எங்களின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான கட்டில்களை எங்களது இளைஞர்கள் தயாரிக்கின்றார்கள். ஒரு சில இளைஞர்கள் நோயாளிகளுக்காக ரோபோ இயந்திரங்களைக் கூட தயாரிக்கின்றார்கள். இதன் ஊடாக எங்களால் முடியுமென்பது தெளிவாக புரிகின்றது. நாடு தொடர்பில் சிந்திக்கும் இவர்கள் தொடர்பில் நான் பெருமையடைகின்றேன். அதனால் நாம் கொரோனா வைரஸ் தொற்றை தோற்கடித்து, எங்களது உணவை நாங்கள் உற்பத்தி செய்து, எங்களது தொழிற்துறைகளை மேம்படுத்தி, எங்களது பலத்தை உலகத்துக்கு காட்ட பலம் பொருந்திய நாடாக மீண்டெழ வேண்டும்.

வரலாற்றில் நாங்கள் இதனை விட பாரதூரமான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றோம். பயங்கரவாதம் இருந்த காலப்பகுதியில் 20, 30 வருடங்களுக்கு முகாம்களில் வாழ்ந்திருக்கின்றோம். பிள்ளைகளுடன் மரண பயத்தில் நடு இரவில் இலை குழைகளை விரித்தும் உறங்கியிருக்கிறோம். அவ்வாறு அர்ப்பணித்த உங்களுக்கு நாட்டுக்காக இந்த காலப்பகுதியில் வீட்டில் இருப்பது பெரிய விடயமில்லையயன நான் நினைக்கின்றேன். நாட்டுக்காக அர்ப்பணிக்குமாறு நான் எனது அன்புக்குரிய மக்களிடம் கேட்கின்றேன். வேறு நாடுகள் முகங்கொடுத்துள்ள அனர்த்தங்களைப் போன்று முகங்கொடுக்காமல் மீண்டெழ முடியுமென நான் நினைக்கின்றேன். நாங்கள் முன்னேறிய இனத்தவர்கள் என்ற அடிப்படையில் மாத்திரமன்றி சுகதேகிகளான இனத்தவர்களாக மீண்டெழ வேண்டும்! என்றார்.

# அவசிய மருந்துகளை அனுப்பியமைக்காக இந்தியாவுக்கு கோட்டாபய நன்றி





தற்போது உலகை அச்சுறுத்திவரும் கோவிட் -19 நெருக்கடியில் இலங்கையும் சிக்கி திணறி வரும் நிலையில் இந்தியா நேற்றையதினம் 10 தொன் அத்தியாவசிய உயிர் காக்கும் மருந்துகளை இலங்கை அரசுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இலங்கை அரசு விடுத்த கோரிக்கைக்கு அமையவே ஏர் இந்தியா சிறப்பு விமானம் மூலம் இந்த மருந்துப் பொருட்கள் நேற்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தியாவின் இந்த அன்பளிப்புக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

விளையாட்டு மைதானம்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (08/04/2020) தலைப்பு
விளையாட்டு மைதானம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623



# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1



படம் 2

**படம் 1**
வரைந்தவர்
அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
டி. ஹரிஸ்மன் – தரம் 8
புனித பத்திரிரியர் கல்லூரி

**இந்த இரு சித்திரங்களும்
இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு -
'விளையாட்டு மைதானம்'**

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'நிலாச்சோறு' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

எஸ். அக்ஷன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஹரினி - தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு - தரம் 7
யாழ். இந்து மகளிர் கல்லூரி

எம். எஸ். அஸ்யாட் அஹமட் - தரம் 2
புத்தளம் மடவக்குளம் மத்திய மகா வித்தியாலயம்

பாஸ்கரன் சதுர்ஜன் - தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

எம். ரிஷாட் - தரம் 9
கல்கமுவ மாதிரி முஸ்லிம் மகா வித்தியாலயம்

டீனா மனோ - தரம் 9
கல்கமுவ மாதிரி முஸ்லிம் மகா வித்தியாலயம்

வாசவி முரளீதரன் - தரம் 7
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

த. ஆரூசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெ மி த க பாடசாலை

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. ஆத்மிகா - தரம் 3
சென் பிரண்டன் ஆரம்பப் பாடசாலை, அவுஸ்திரேலியா

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



# அம்புலன்ஸ் வசதி வழங்குவதில் நேர்ந்த தாமதம் அநியாயமாகப் பறிபோயிற்று இளைஞனின் உயிர்

யாழ்ப்பாணம் – அராலியில், திடீரென உடல் நலம் பாதித்த இளைஞனை உரிய நேரத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு சுகாதார அதிகாரி ஒத்துழைக்காமையினால் குறித்த இளைஞர் ஞாயிறன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அராலி மத்தி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 30 வயதான நாகேந்திரன் புஷ்பராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த இளைஞன் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த நிலையில், தேக ஆரோக்கியத்துடன் இருந்துள்ளார். எனினும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிளினிக் சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் ஞாயிறு காலை திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, அவசர அம்புலன்ஸுக்கு அழைப்பை எடுத்த போது பொதுச் சுகாதார பரிசோதகர் வந்து உறுதிப்படுத்தினால்தான் அம்புலன்ஸில் ஏற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொதுச் சுதாதார பரிசோதகர் மற்றும் சுகாதார சேவைகள் ஊழியர்கள் இவருக்கு சாதாரண நோய்தான் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று மருந்து வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து இளைஞர்கள் இருவர் அவரை அராலி கொட்டைக்காடு பிரதேச வைத்தியசாலைக்கு சென்ற போது அவரது நிலை மோசமடைந்துள்ளது. இதையடுத்து பிரதேச வைத்தியசாலையில் நின்ற அம்புலன்ஸ் உதவியைக் கேட்டபோதும் நீண்ட நேரத்தின் பின்பே அவ்விளைஞன் அம்புலன்ஸில் ஏற்றப்பட்டுள்ளார். எனினும் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்து விட்டார் எனக் கூறப்படுகிறது.

காலை 8 மணிக்கு ஆரம்பித்த இந்தப் போராட்டம் மதியம் 2.45 மணிக்கு இளைஞனின் மரணத்தில் முடிந்துள்ளது.

உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா உள்ளதா என்ற பரிசோதனை முடிவு வரும் வரையில் அந்த இளைஞனுடன் வந்த இருவரும் யாழ். போதனா வைத்திசாலையில் தனிமைப்படுத்தலில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிக்கையில் –

இந்த இளைஞனுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உயிரிழப்புக்கான காரணம் பிரேத பரிசோதனையில் தான் அறிய முடியும். பிரதேச ரீதியிலான நடவடிக்கைகள் அனைத்தும் பிரதேச சுகாதார சேவைகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால்தான் ஒழுங்கமைக்கப்படுகின்றன – என்றார்.

வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பானர் வைத்தியர் ஆர். கேதீஸ்வரன் தெரிவிக்கையில் –

இந்தச் சம்பவம் தொடர்பாக அன்று மதியம் 1 மணியளவில் தகவல் கிடைத்தது. நான் நடவடிக்கை எடுப்பதற்குள் நோயாளி இறந்து விட்டார். தற்போதைய இடர் நேரத்தில் நோயாளர்களை வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு இந்த நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது. ஏற்கனவே கொரோனாத் தொற்றாளர்கள் சாதாரண நோயாளி எனத் தம்மை அடையாளப்படுத்தி வைத்தியசாலையில் சேர்த்த சம்பவங்கள் பதிவாகியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறான அம்புலன்ஸ் பிரச்சினையின் போது அவசர அழைப்பாக 0212226666, 0212217982 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தம்பலகாமத்தில் வயோதிபர் விபத்தில் சாவு

திருகோணமலை – கந்தளாய் பிரதான வீதி, 96ஆம் கட்டை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று, மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேற்றுப் பிற்பகல் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளாரென தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் – ராஜாஜி நகர் பகுதியைச் சேர்ந்த அப்துல்சலாம் (67 வயது) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர், சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு, இன்று பிரேத பரிசோதனை முடிவடைந்த பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க இருந்தது.

விபத்து தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS
DS NO - 882

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்குப் புதிய முறைமை அறிமுகம்

ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்குடனும் மக்கள் தேவையற்ற வகையில் ஒன்றுகூடுவ தைத் தவிர்க்கும் வகையிலும் அரசால் அவ்வப்போது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுகின்றது.

அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அதிக எண்ணிக்கையானவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் ஒன்றுகூடுவது கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பெரும் தடையாகும்.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவால் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் 4 முறைமைகளின் கீழ் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமை அலுவலகம், மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், தொகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களின் ஊடாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் கீழ் வரும் 50 ஊழியர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்கள் பொலிஸ் தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும்.

மேல் மாகாணம் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் கீழ் வரும் 50 ஊழியர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கொண்ட நிறுவனங்களுக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

மேல் மாகாணம் தவிர்ந்த மாகாணங்களில் உள்ள 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

அந்தந்த பொலிஸ் பிரிவுகளின் கீழ் உள்ள 10 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட மற்றும் 50 இற்கும் குறைவான ஊழியர் எண்ணிக்கை யைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத் திரங்கள் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்படும்.

பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திலுள்ள 10 இற்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அனுமதி அந்தந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே விசேட மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் ஆட்களுக்கான அனு மதிப் பத்திரங்களை வழங்குவதற்குப் பொலிஸ் நிலையங் களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை எந்த அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதை ஏலவே உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார். அனுமதிப்பத்திரங்களுக்கு மிகவும் நியாயமான காரணத்துடன் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் உள்ளிட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்குத் தமது தொழில் அடையாள அட்டையை ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்த முடியும். எனினும், தொழில் நிமித்தமின்றி தமது ஊழியர் அடையாள அட்டையை துஷ்பிரயோகம் செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் புதிய முறைமை உள்ளிட்ட சுற்றுநிருபத்தை www.police.lk என்ற இணையத்தளத்திலும் அரசதக வல் திணைக்கள இணையத்தளத்திலும் பார்வையிட முடியும எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் கொரோனாப் பேரிடர் நீங்க வேண்டி மகாயாகம்

## சிறீதரன், வேழமாலிகிதன் பங்கேற்பு





கிளிநொச்சி,ஏப்.08

உலக அமைதி வேண்டி கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் நேற்றுக் கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் விசேட யாகம் இடம்பெற்றது.

தற்போது இந்த உலகத்தையே மிகவும் ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இந்த உலகம் அமைதி இன்றி இருக்கிறது.

இந்த கொடூர தாக்கத்தில் இந்த உலகம் மிக விரைவாக விடுபெற்று மக்களுக்கு சாந்தியும் சமாதானமும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த யாகம் இடம்பெற்றது.

இந்த யாகப் பூஜையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், ஆலய அறங்காவலர் சபையினர் என மட்டுப்படுத்தப்பட்ட சிலர் மட்டும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2020 இல் வெளியிடப்பெற்றது.